ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



# ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் அருளிச் செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யான சாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யான அவதாரிகை சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

ஒரு ஜீவனுக்கு இவ்வுலகில் மூன்று விதமான ப்ரயோசனங்கள் உள்ளன. இந்த உலகம், மற்ற உலகங்கள் அற்பமாகையாலே இவை கடைசி ப்ரயோசனம். ஆத்ம அனுபவங்கள் சிற்றின்பமாகையாலே அவை நடுவான ப்ரயோசனம். சர்வேஸ்வரனே தலையான ப்ரயோசனம்.

இத்தலையாய ப்ரயோசனத்தைக் காட்டும் சாஸ்த்ர நிர்மாணங்களை நிலை நிறுத்துவதைக் கொண்டார்கள் ரிஷிகள். சாஸ்த்ரங்களின் எல்லையான பகவத் ப்ராப்தியைக் கண்டார்கள் ஆழ்வார்கள். அதனிலும் எல்லையான பாகவத ப்ராப்தியைக் கண்டார் ஸ்ரீ மதுரகவி ஆழ்வார்.

இதையே ஸ்ரீராமாயண ப்ருஷர்களில் ஸ்ரீசத்ருக்னாழ்வானிடத்தில் காணலாம். ஸ்ரீராமாயண புருஷர்கள் நால்வரும் நான்கு தர்மங்களைக் காட்டினார்கள். முன்னோர் சொன்னதை ஒருவன் செய்யக் கடமைப்பட்டவன் என்பதை நிலைநாட்டினார் தமது தந்தை வாக்கினை நிறைவேற்றிய எம்பெருமான். அடிமை தன் ஸ்வாமியை விடாது நிற்க வேண்டும் என்பதை நிலை நாட்டினார் இளைய பெருமாள். ஸ்வாமி உகந்ததையே அடிமை செய்யக் கடவன் என்பதை நிலை நாட்டினார் ஸ்ரீபரதாழ்வான். அவ்வாறே இருக்கின்ற பாகவதரை அல்லாது மற்றொன்றை அறியாத பாகவத கைங்கர்யபரனாய் நின்றார் ஸ்ரீசத்ருக்னாழ்வான்.

ஸ்ரீவைகுண்டநாதனுடைய ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தைக் கொண்டு, அதிலும் கம்ச வதத்திற்கு முன்னால், வெண்ணை திருடி, யசோதைப் பிராட்டியிடம் அகப்பட்டு, அவள் கையால் கட்டுப்பட்டு, அவளிடம் அஞ்சி நின்ற க்ருஷ்ணனையே தமக்கு எல்லாமாகக் கொண்ட ஸ்ரீவைஷ்ணவர்களையே ஜீவன்களுக்கு நாதரும் வழிகாட்டியுமாக ஸ்வாமி நம்மாழ்வார் நிச்சயித்தார். அதையே கொண்டு சகல விஷயங்களிலும் பாகவதரைப் பற்றுவதே உசிதம் என்று தமக்கு உபகாரரான நம்மாழ்வாரையே பற்றுகிறார் மதுரகவி ஆழ்வார்.

நம்மாழ்வார் பொய்நின்ற ஞாலத்தில் தொடங்கி அவாவற்று வீடு பெற்ற வரை சொன்னவற்றில் "பயிலுஞ் சுடரொளி" மற்றும் "நெடுமாற்க்கடிமை" பாசுரங்களில், அடைவதில் எல்லையாக பாகவத கைங்கர்யத்தையே பற்றுவதால் மதுரகவி ஆழ்வாரும்

அதையே பற்றுகிறார்.

ஸ்ரீமதுரகவி ஆழ்வார், எம்பெருமானிடத்திலும் ஸ்ரீவைஷ்ணவர்களிடத்திலும் நம்மாழ்வார் கண்டதை, தன் ஆசார்யன் திருவடிகளிலே கண்டு அதுவே ருசித்து அதையே பேசுகிறார்.

மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்
நஞ்சீயர், நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்